**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 118/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : இளமதி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : ராமு | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2025

---

**முதல் விசாரணை:**

நான் வில்லாணியில் குடியிருந்து வருகிறேன். கரவை மாடு வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது கணவர் அரசு போக்கு வரத்து கழகத்தில் டிரைவராக பணிபுரிந்தார். கடந்த 07.04.2019ம் தேதியன்று எனது கணவர் விடுமுறையில் இருந்ததால் கருமாத்தூரில் உள்ள கழுவநாதன் கோவிலுக்கு நேத்திகடன் செலுத்துவதற்காக நானும், எனது கொழுந்தன், எனது கொழுந்தன் பிள்ளைகள் மற்றும் எங்களை ஏற்றி சென்ற காரின் டிரைவர் ராமு ஆகியோர்கள் வாடகை காரில் சென்றோம். எனது கணவர் மட்டும் தனியாக TN 58 AW 5227என்ற சூப்பர் ஸ்பிளேண்டர் இருசக்கர வாகனத்தில் வந்தார்.

2) கோவில் நேத்திகடன் செலுத்தி விட்டு வரும்போது தி. விலக்கு அருகே விபத்து ஏற்பட்டது. அப்போது மணி மாலை 3.45 மணியிருக்கும். நாங்கள் கிழக்கிலிருந்து மேற்காக மதுரை – தேனி ரோட்டில் வந்தபோது எதிராக வந்த TN 28 AW 1699 என்ற பதிவெண் கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் மேற்கிலிருந்து கிழக்காக சைகை காண்பிக்காமல் கையும் காண்பிக்காமல் ஹாரன் அடிக்காமல் வந்ததால் எனது கணவர் எதிரே வந்த லாரி மீது மோதிவிட்டார். எனது கணவர் விபத்து ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டார் பின்னால் வந்த நாங்கள் அவரை தூக்கி பார்த்த போது அவருக்கு தலை, நெஞ்சு, காதில் அடிப்பட்டு ரத்தம் வந்தது. உடனே நாங்கள் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் தூக்கி கொண்டு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

3) அவரை மருத்துவமனையில் பரிசோதித்து பார்த்து விட்டு அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். உடனே நாங்கள்

காவல் நிலையம் சென்று ஆய்வாளரிடம் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது கணவருக்கு விபத்து ஏற்படுத்திய நபரின் பெயர் சத்தியசுந்தரம் என போலீசார் விசாரணை செய்து என்னிடம் சொன்னார்கள். மேற்படி விபத்து ஏற்படுத்தி நபரை நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலும். மறுநாள் பிரேத பரிசோதனை செய்து எனது கணவரின் உடலை பெற்றுக்கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

4) நான் B.B.A படித்துள்ளேன். நாங்கள் அன்றை தினம் அதிகாலை 4.00 மணிக்கு கோவிலுக்கு சென்றோம். அப்போது எங்களுடன் எனது கணவர் அவரது இருசக்கர வாகனத்தில் கோவிலுக்கு வந்தார். எனது கணவருடன் நானும் எனது பிள்ளைகளும் இல்லாமல் அவர் மட்டும் தான் தனியாக இருசக்கர வாகனத்தில் எதற்காக சென்றார் என்றால் நாங்கள் உறவினர்களுடன் காரில் சென்றதால் அவர் தனியாக வாகனத்தில் வந்தார். காரில் நாங்கள் ஏழு நபர்கள் சென்றோம். எங்கள் ஊரிலிருந்து கழுவநாதன் கோவிலுக்கு அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம். நாங்கள் அரை மணி நேரத்தில் சென்றுவிட்டோம் என்றால் சரிதான்.

5) கோவிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் மாலை 2.30 அல்லது 2.45 மணிக்கு கிளம்பினோம். தி.விலக்கிற்கும் கோவிலுக்கும் எவ்வளவு நேரம் பயண நேரம் என்றால் அதுபற்றி தெரியாது. எனது கணவர் முன்னால் பைக்கில் சென்றால் நாங்கள் பின்னால் காரில் வந்தோம். தி.விலக்கிற்கு நாங்கள் வரும்போது எனது கணவர் முன்னால் சென்று கொண்டிருந்தார் நாங்கள் பின்னால் வந்தோம். அவர் பைக்கும் எங்கள் காரிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சரியாக தெரியவில்லை. விபத்து ஏற்பட்ட சாலை அகலமான அதிக போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். அந்த விபத்து பகுதியில் தெற்குபுறமாக திருமங்கலம் போகும் சாலை உள்ளது என்றால் சரிதான். நான் காரில் எந்த பக்கம் உட்கார்ந்திருந்தேன் என்றால் பின்பக்கம் உட்கார்ந்திருந்தேன். மேற்கிலிருந்து கிழக்காக வந்த லாரி வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடந்த போது எனது கணவர் ஓட்டி வந்த வாகனம் லாரியின் பின்பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் காரின் பின்பக்கம் அமர்ந்து வந்ததால் விபத்தை நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். எனது கணவர் சாலையின் தெற்குபக்கம் கீழே விழுந்து கிடந்தார்

என்றால் எனக்கு பதட்டத்தில் அதுபற்றி ஞாபகமில்லை. 108 ஆம்புலன்சிற்கு எனது கொழுந்தன் போன் செய்தார். நாங்கள் அனைவரும் 108 ஆம்புலன்சில் எனது கணவருடன் சென்றோம். சம்பவ நடந்த சமயம் 3.45 மணி இருக்கும். மாலை 6.00 மணிக்கு பின் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் நேரம் சரியாக ஞபாகமில்லை.

6. புகாரை நான் தான் கைப்பட எழுதி கொடுத்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனத்தின்எண்ணை சம்பவ இடத்திலேயே பார்த்துவிட்டேன். எதிரியை சம்பவ இடத்தில்பார்த்தேன். அவரது பெயரை போலீசார் சொன்னார்கள். நான் சொல்வது போல் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும், அகலமான ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்து சாலையின் வடக்கிலிருந்து தெற்காக திருமங்கலம் செல்வதற்காக முறையாக சைகை காட்டி ரோட்டை கடந்துவிட்டார் என்றும், அவ்வாறு சென்ற பின்பு எனது கணவர் எதிரியின் வாகனத்தை கவனிக்காமல் இருசக்கர வாகனத்தில் வேகமாக ஓட்டி வந்து லாரி பின்பகுதியில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல., நாங்கள் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Elamathi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.